3. கவன ஈர்ப்பு

திருப்புவனம் பேருந்து நிலையம்--போக்குவரத்து நெரிசலால் நெடுஞ்சாலையில் ஏற்பட்டுள்ள நிலை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. க. பாரமலை அவர்கள் ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. க. பாரமலை.

***திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகங்கை மாவட்டம், திருப்புவனத்தில் பேருந்து நிலையம் செயல்படாததால் தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

அறிக்கை

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் சிறப்புச் சிற்றூராட்சியில் சிவகங்கை தேவஸ்தானத்தால் சர்வே எண் 16/16-ல் சுமார் 1½ ஏக்கர் இடத்தில் வாரச் சந்தை நடத்தப்பட்டு வந்தது. மேற்படி இடமானது A பதிவேட்டின்படி சந்தைப் புறம்போக்கு என வகைப்பாடு செய்யப்பட்டதன் காரணமாக, அப்போதைய பேரூராட்சி நிர்வாகத்தால் மேற்படி இடத்திலிருந்து ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு, அந்த இடம் கையகப்படுத்தப்பட்டு, பேரூராட்சி நிர்வாகம்மூலம் தற்காலிகமாகப் பேருந்து நிலையம் அமைக்கப்பட்டு 1-4-2000 முதல் செயல்பட்டு வந்தது.

இந்நிலையில் மேற்படி முன்னாள் திருப்புவனம் பேரூராட்சி நிர்வாகம்மூலம் கையகப்படுத்தப்பட்டு பேருந்து நிலையம் அமைக்கப்பட்ட செயல்பாட்டை எதிர்த்து சிவகங்கை

[திரு. கே.பி. அன்பழகன்] [2005 செப்டம்பர் 26

தேவஸ்தானம்மூலம் W.P.No. *5503/2000* மற்றும் W.M.P.எண் *8997/2000*–இன்படி சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில், மேற்படி இடத்தினை மீண்டும் சிவகங்கை தேவஸ்தானத்திற்கு ஒப்படைக்கத் தீர்ப்பு வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் மேற்படி இடம் *30–8–2001* அன்று மீண்டும் சிவகங்கை தேவஸ்தானத்திற்கு ஒப்படைக்கப்பட்டது.

இந்த இடத்தை மீண்டும் சிவகங்கை தேவஸ்தானத்திற்கு ஒப்படைக்க வழங்கப்பட்ட சென்னை உயர் நீதிமன்ற உத்தரவினை எதிர்த்து திருப்புவனம் சிறப்புச் சிற்றூராட்சி நிர்வாகத்தால் W.A.No.1405/2001–ன் W.P.No.*5503/2000*–ல் மேல் முறையீடு செய்யப்பட்டு, தற்போது வழக்கு சென்னை உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. எனவே, பேருந்து நிலையம் தற்பொழுது செயல்படாத நிலை ஏற்பட்டுள்ளது. இருப்பினும், பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள இடையூறினைக் கருத்தில் கொண்டு, மாற்று இடம் பரிசீலனையில் உள்ளது.

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையை நான் படித்தேன். திருப்புவனம் ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க ஊர். ஏறக்குறைய *30* ஆயிரம் பேர் அங்கு வசிக்கின்றார்கள். மதுரை–இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையின் இரு பக்கங்களிலும் அமைந்திருக்கின்ற ஊர். மூன்று அடிகளார்களாலும் பாடல் பெற்ற ஸ்தலம். அருள்மிகு புஷ்பனேஸ்வரர்–சௌந்தரநாயகி அம்மன் திருக்கோயில் அங்கு இருக்கின்றது. பக்கத்திலே மடப்புரத்தில் ஒரு பிரசித்தி பெற்ற கோயில் இருக்கின்றது. அவை இருக்கின்ற காரணத்தால் அந்த ஊருக்கு *50* ஆயிரம் பேர் தினமும் வந்து சென்று கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, திருப்புவனத்திற்குப் பேருந்து நிலையம் என்பது மிக மிக அவசியமானது. இது சம்பந்தமாக உயர் நீதிமன்றத்தில் தீர்ப்பு இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் குறிப்பிட்டிருக்கின்றார். அந்தத் தீர்ப்பு— தடையாணை வழங்கப்பட்ட பின்னாலே, பேரூராட்சிமூலமாக மேல்முறையீடு செய்யப்பட்டு, அந்தத் தடையாணை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, இன்றுள்ள நிலவரப்படி இது அரசாங்கத்தினுடைய சொத்து. ஏற்கெனவே இது பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் *20–3–2000* அன்று அந்த இடத்தைப் பார்வையிட்டு, உடனடியாக அங்கே பேருந்து நிலையம் தொடங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று ஆணையிட்டார்கள். அதன்படி வேலை விரைவாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற நேரத்திலே, உயர் நீதிமன்றத்தில் தீர்ப்பு வந்திருக்கிறது. இந்தத் தீர்ப்பு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அரசாங்கம் நடவடிக்கை

2005 செப்டம்பர் 26] [திரு. க. பாரமலை]

எடுப்பதில் எந்தத் தடையும் இல்லை என்று நான் கருதுகிறேன். அதோடு மட்டுமின்றி, அமைச்சர் அவர்கள் பதிலிலே சொல்லியிருக்கிறார்கள். இந்த மக்களுடைய நலன் கருதி வேறு இடத்தில் transfer செய்வதற்கு அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறார்கள். வேறு இடமே இல்லை. அந்த இடம் அரசுக்குச் சொந்தமான இடம். ஆகவே, நீதிமன்றத்தில் இருக்கின்ற அந்த வழக்கை விரைவில் முடிப்பதற்குத் தக்க நடவடிக்கை எடுத்து, அந்த இடத்தைப் பெற்று, மக்கள் எல்லாம் விரும்புகிற ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒன்றை நான் குறிப்பிட விரும்புவது, பொது மக்கள்... *(மணியடிக்கப்பெற்றது)*

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பாரமலை, என்ன? (குறுக்கீடு) இல்லை, இல்லை. ஒரே ஒரு கேள்வி கேளுங்கள். (குறுக்கீடு) பக்கத்திலே இருப்பவரே வருத்தப்படுகிறார்.*

திரு. க. பாரமலை: *ஆகவே, ஏறக்குறைய 20 ஆயிரம் மக்கள் திரண்டு, அங்கு போராட்டம் நடத்தினார்கள். அதிலே ஒரு வழக்கு தொடரப்பட்டது. அந்த வழக்கை அரசு வாபஸ் பெற வேண்டும் என்று கேட்டபோது, அரசு உண்மை நிலையைக் கருதி, வாபஸ் வாங்க வேண்டும் என்று முடிவெடுத்து அதற்குரிய ஒரு நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்தச் சூழ்நிலையில், ஏற்கெனவே போட்ட F.I.R.–ல், 15 மற்றும் 60 பேர் என்று சொல்வதை அடிப்படையாக வைத்து...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பாரமலை, மற்ற விவரங்கள் எல்லாம் அமைச்சருக்குத் தெரியும்.*

திரு. க. பாரமலை: *இல்லை, இல்லை. இன்றைக்குக்கூட....*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மற்ற விவரங்கள் எல்லாம் அமைச்சருக்குத் தெரியும். உங்களுடைய கேள்வி என்ன? கோரிக்கை என்ன?*

திரு. க. பாரமலை: F.I.R. போடப்பட்டிருக்கிறது என்ற விவரத்தை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அவற்றையெல்லாம் நீக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற இடம் சிவகங்கை

தேவஸ்தானம்மூலம் அங்கே தடையாணை பெற்ற பிறகு அந்தத் தீர்ப்பானது இன்னும் பெறப்படவில்லை. ஆகவே, அந்தப் பகுதி மக்களுடைய தேவையைக் கருத்தில் கொண்டு, இப்போது அந்தப் பகுதியிலே நம்முடைய மாநிலங்களவை உறுப்பினர் மலைச்சாமி அவர்களால் மூன்று இலட்சம் ரூபாய் அளவிலே அங்கே தினசரி மார்க்கெட் அருகில் பயணிகள் நிழற்குடை ஒன்று அமைப்பதற்காக ஒப்புதல் வழங்கப்பட்டு, அந்தப் பணியானது கூடிய விரைவிலே தொடங்கப்பட இருக்கிறது. அந்தப் பணி தொடங்கப்பட்ட பிறகு, அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்களுக்கு அந்தப் பேருந்து நிலையம்– அதைப் பயன்படுத்துகின்ற நேரத்திலே மாற்று இடத்தைக் கண்டறிந்து, அந்த மாற்று இடத்திலே மீண்டும் பேருந்து நிலையம் அமைப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, அமர்கிறேன்.

4. ஒகேனக்கல் நீர்வீழ்ச்சிப் பகுதியில் எழுப்பப்பட்டுள்ள பிரச்சினை – மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது ஒரு அறிக்கையினை அளிப்பார்கள்.*

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு – கர்நாடக எல்லையில் ஒகேனக்கல் நீர்வீழ்ச்சிப் பகுதி முக்கிய சுற்றுலாப் பகுதியாகும். இங்கு வருகை புரியும் ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பிற்காகவும், வசதிக்காகவும், சுற்றுலாப் பயணிகளின் கோரிக்கையின் அடிப்படையில், தமிழக அரசு சில பணிகளை மேற்கொள்ள முற்பட்டது. இப்பணிகள் மேற்கொள்ளப்படும் இடம், கர்நாடக மாநில எல்லைக்குள் இருப்பதாகப் பிரச்சினை எழுப்பப்பட்டது.

தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் 16–9–2005 அன்று கர்நாடக மாநிலத்தின் வனத் துறை அலுவலர்களும் மற்றும் தமிழ்நாடு வனத் துறை அலுவலர்களும் கூட்டாக, சம்பந்தப்பட்ட இடத்தைப் பார்வையிட்டனர். அதன் பின்னர், 19–9–2005 அன்று கர்நாடகா மற்றும் தமிழ்நாடு அலுவலர்கள் இணைந்து மேற்கொண்ட நில அளவையின் அடிப்படையில், மேற்படி பணிகள் தமிழ்நாட்டு